ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

ஸ்ரீ மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அருளிச்செய்த

# ॥ வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Sri T. Raguveeradayal of Tiruppullaani, India, for providing a scanned copy of this document and Smt. Vasundara Ramarajan of California, USA, for thoroughly proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# || வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து ||

காப்பு

உடைக்கலமாம் எங்கள் உயர் தேசிகன் மேல்⋆
அடைக்கலப் பத்தோத அருளும் ⋆ - படைக்கலம் ஐந்-
தேந்தும் பரமன் எழில் குருகை வாழ் மாறன்⋆
சேர்ந்தமலர்த் தாள் இரண்டும் சேர்ந்து

நூல்

‡எழுத்தாதி விண்ணவர்க் கெட்டாப் பரமன் இணையடியை⋆
வழுத்தார்வம் கொண்டருள் வேதாந்த தேசிக! மண்ணிடைப்⋆
பழுத்தாரு ஞானவரோ தயனே! அருள் பாலித்தெனை⋆
அழுத்தா தனலிடைக் காப்பாய் உன் தாளுக்கடைக்கலமே (1)

மண்ணாசையொடு மதியாத காதல் மயக்க⋆ மிகும்
பெண்ணாசை கொண்டு திரிகுவனோ பெரும் தேவரொடும்⋆
எண்ணாசை போற்றரும் வேதாந்த தேசிகன் என்றறையும்⋆
அண்ணா கருணைக் கடலே உன் தாளுக்கடைக்கலமே (2)

மாதாவும் பெற்றருள் தந்தையும் யாவு மதியொடருள்⋆
தாதாவும் செல்வத் தனையரு மற்றத் தனமும் எல்லாம்⋆
நீதான் எனக்கொண்டு வேதாந்த தேசிக! நின் புகழே⋆
ஆதாரமாக அடைந்தேன் உன் தாளுக்கடைக்கலமே (3)

செண்டார் முலைத் திருவாழ் மார்பன் வேங்கடச் செல்வன் அருள்⋆
கண்டாவதார மெய்க் கற்பகமே! இந்தக் காசினிமேல்⋆
பண்டாய தீவினை பற்றற்று மாய்த் தறு பாவம் எல்லாம்⋆
அண்டாது காத்தருள் செய்வாய் உன் தாளுக்கடைக்கலமே (4)

www.prapatti.com

புத்தோடு பேய்மதப் பூண்டறுத்தே அறம் பொங்கியெழச்⋆
 சத்துவ மாந்தர் தலை எடுத்தேறவித் தாரணி மேன்⋆
மெய்த் திருநாதன் சமையம் என்றேத்தும் விளக்கொளியீ⋆
 அத்த நல் தூப்புல் வருவாய் உன் தாளுக்கடைக்கலமே (5)

எல்லா விதத்திலும் அறிந்தார் இவரென வேழுலகும்⋆
 சொல்லார வேத்தித் தொழுமாறு தோன்றிய தோன்றலெனும்⋆
வல்லாய்! கவிச்சிங்கமானவனே! செயவாக் கருணீ⋆
 அல்லாதெவர் துணை அய்யா! உன் தாளுக்கடைக்கலமே (6)

தம்பத் துகிரிட்டு நீர் மாற்றி ஆண்டி சரண் புகுமாறு⋆
 உம்பர்க் கரிய பன்னாகம் தன் தாயுனை ஒப்பவரார்⋆
வம்புற்ற பூம்பொழில் சூழ் தூப்புன் மேவிய மாணிக்கமே⋆
 அன்புற்ற வண்மைக் குணத்தாய் உன் தாளுக்கடைக்கலமே (7)

எல்லாம் பரனிலை ஒப்பவர் என்று மிகத்தினிடை⋆
 நல்லார் எவரும் அவர்நிலை நண்ணுதல் ஞாயம் என்றும்⋆
சொல்லார் சுருதி அருள் தூப்புன் மேவிய தூயநெறி⋆
 அல்லார் தமக்கிருள் அல்லாகு வாய் உன் அடைக்கலமே (8)

முடிச்சோதியும் பொன் முகச்சோதியும் அருண் மூரன்மணி⋆
 அடிச்சோதியும் கண் மலர்ச்சோதியும் அநுமானிகரும்⋆
திடச்சோதியும் கவித் தேன் சோதியும் எங்கள் தேசிகனின்⋆
 அடிச்சோதியும் எந்த நாளறிவேன் உன் அடைக்கலமே (9)

‡செய்யாட்குகந்த திருமார்பன் வேங்கடச் சீர்வரையான்⋆
 மையாரும் கண்டன் மலரயன் ஏத்தி வணங்கு⋆ வளைக்
கையானருளில் கனிந்துயர் தூப்புல் கதிரனைய
 ஐயா⋆ சரணம் அடைந்தேன் தாளுக்கடைக்கலமே (10)

சீராரும் வைணவர்கள் சிறக்க வந்தோன் வாழியே⋆
 திருமாலின் சமய நிறந்திருந்தி வந்தோன் வாழியே⋆
ஏராரும் உடையவருக்கின்ப முற்றோன் வாழியே⋆
 எழில் அரங்கன் பதமுளத்தில் இருத்தினான் வாழியே⋆

www.prapatti.com

தாராரும் திருவோணம் தனில் உதித்தோன் வாழியே⋆
தனித் தூப்புல் எனுநகரம் தழைக்க வந்தோன் வாழியே⋆
தேராரும் வேதாந்தம் சிறப்பித்தோன் வாழியே⋆
தேசிகனார் இணையடிகள் தினந்தினமும் வாழியே (11)

॥ சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com